# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள், செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**நிகழ்ச்சி நிரல்**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.02.2019ல் ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் தொடர்பாக, திருத்திய பராமரிப்பு கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவைகளை பாதாள சாக்கடை திட்டம் உபவிதிகளின் படி உயர்வு செய்து வசூலிக்க அனுமதி வேண்டி இவ்வலுவலக கடிதம் எண். இ4/1825/2017 (மையம் ) நாள்.08.09.2019ம் வாயிலாக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாகம் ஆணையரகம் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான திருத்திய உபவிதிகளுக்கு பொது அங்கீகாரம் வழங்கி தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.22830/2019/பா.சா.தி–1 நாள்.20.09.2019ல் நிபந்தனைகளுடன் வசூலிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்படி பாதாள சாக்கடை உபவிதிகள் நிபந்தனைகள் வரிசை எண்.3ல் பொதுமக்களுக்கு தகுந்த கால அவகாசம் கொடுத்து தகவல் தெரியப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளதன் பேரில், பாதாள சாக்கடை கட்டணம் உயர்வு மற்றும் உபவிதிகள் குறித்து தினமணி மற்றும் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 16.10.2019 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை.

எனவே, பாதாள சாக்கடை பராமரிப்பு கட்டணம் மறறும் வைப்புத் தொகை உயர்வு கட்டணம் உள்ளடக்கிய உபவிதிகளுக்கு இறுதி அங்கீகாரம் பெறவும், திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழ்களில் வெளியிடவும், நடைபெற்று வரும் பகுதி 2, தொகுப்பு எண்.2, ஏப்ரல் 2021ல் முடிவடைந்தவுடன், 01.04.2021 (ஏப்ரல் முதல் தேதி இரண்டாயிரத்து இருபத்து ஒன்று) முதல் பாதாள சாக்கடை உபவிதிகளில் செயல்படுத்தப்பட அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

ஒப்புதல்அளிக்கலாம்.

**இ4/1825/2017(மையம்)**

**தீர்மானம் எண்.121 (பொருள்–1): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

ஸ்ரீரங்கம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகளை திரு.ஜி. ஆர். இளங்குமரன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரரின் கடிதம் உதவி ஆணையர் (கணக்குகள்), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் ந.க.எண்.பி5/156/2020, நாள். 10.03.2020ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப் பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | |
| | | | | **தொகுப்பு** | **ப. எண்** | **வ . எண்** |
| 1 | வார்டு எண் 52அல்லித்துறை சாலை அரசு பொது மருத்துவமனை தெற்கு பக்கம் பயணியர் பேருந்து நிழற்குடை அமைத்தல்<br>**மதிப்பீடு ரூ.8.75 லட்சம்**<br>இ3/9951/15 | 29.01.16 (SD) 4% | 34920.00 | VIII | 58 | 10 |
| 2 | வார்டு எண் 12 நத்தர்ஷா பள்ளிவாசல் சோபீஸ் கார்னர் அருகில் பயணியர் நிழற்குடை அமைத்தல்<br>**மதிப்பீடு ரூ.7.00 லட்சம்**<br>இ3/7175/15 | 30.10.15 (SD) 4% | 27801.00 | VIII | 39 | 5 |
| 3 | வார்டு எண் 45 ஜெயநகர் விஸ்தரிப்பு, கருமண்டபம் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல்<br>**மதிப்பீடு ரூ.6.00 லட்சம்**<br>இ3/7901/15 | 09.01.16 (SD) 4% | 23485.00 | VIII | 53 | 14 |
| 4 | வார்டு எண் 45 திண்டுக்கல் பிரதான சாலை பால்பண்ணை பேருந்து நிறுத்தத்தில் பயணியர் பேருந்து நிழற்குடை அமைத்தல்<br>**மதிப்பீடு ரூ.8.75 லட்சம்**<br>இ3/9952/15 | 22.02.16 (SD) 4% | 34922.00 | VIII | 61 | 46 |
| | **மொத்தம்** | | **121128.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**1,21,128/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.ஜி.ஆர்.இளங்குமரன் அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**1,21,128/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**E3/9951/15(மை)**

**தீர்மானம் எண்.122 (பொருள்–2): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிசேகபுரம் கோட்டம், வார்டு எண் **56**, தில்லை நகர் **7**வது குறுக்குச் சாலையில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி வணிக வளாகத்தினை வரும் **8.4.2020** அன்று ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது நிலவும் கொரோனா தொற்றுநோய் பேராபத்து காரணமாக தமிழக அரசு **21** தினங்களுக்கு மக்களை வீடுகளை விட்டு வெளியேறக்கூடாது என **144** தடையுத்திரவு சட்டம் பிறப்பித்துள்ளதால், மேற்கண்ட தேதியில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்த இயலாத சூழ்நிலை நிலவுகிறது. மேலும் புத்தூர் சின்னமைதானம் மீன்சந்தையை இடித்துவிட்டு சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள கட்டிடத்தையும் சேர்த்து வாடகைக்கு விட ஏதுவாக (அரசு வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை சதுர அடிக்கு ரூ.**42**/- வீதம்) முழுக் கட்டிடத்தையும்

ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி இரு வணிக வளாகக் கட்டிடங்களின் அளவுகள் கீழ்வருமாறு.

| கட்டுமான விபரம் | தில்லை நகர் வணிக வளாகம் (வார்டு எண் 56) | அரசு வழிகாட்டு மதிப்பு சதுர அடிக்கு ரூ.53/- | | புத்தூர் சின்னமைதானம் வணிக வளாகம் (வார்டு எண் 52) | அரசு வழிகாட்டு மதிப்பு சதுர அடிக்கு ரூ.42/- |
|---|---|---|---|---|---|
| | A | | | B | |
| தரைத்தளம் | 846.25 ச.மீ(அ)9105.65 ச.அடி | ரூ.53/ | | 2107.13 ச.மீ (அ) 22672.72 ச.அடி | ரூ.42/ |
| முதல்தளம் | 862.95. ச.மீ(அ)9285.34ச.அடி | ரூ.53/ | | 1372.86 ச.மீ (அ) 14771.97 ச.அடி | ரூ.42/ |
| இரண்டாம் தளம் | 1005.15 ச.மீ (அ)10815.41 ச.அடி | ரூ.53/ | | 2038.08 ச.மீ (அ) 21929.74 ச.அடி | ரூ.42/ |
| மூன்றாம் தளம் | 963.97. ச.மீ (அ)10372.32 ச.அடி | ரூ.53/ | | 1760.43 ச.மீ (அ) 18942.23 ச.அடி | ரூ.42/ |
| மொத்தம் | 50275.34 ச.அடி | | | 106483.43 ச.அடி | |

மேற்கண்ட இரண்டு வணிக வளாகங்களுக்கும் ஒரே நாளில் ஏலம் /ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு ஏல அறிவிக்கைக்கு அனுமதியும், மேற்படி அறிவிக்கையினை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தைப் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், புத்தூர் சின்ன மைதானம் வணிக வளாகத்துக்கு அரசு வாடகை மதிப்பு நிர்ணயம் செய்ததையும் அனுமதிக்க வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மேற்காணும் இரு வணிக வளாகங்களுக்கும் ஒரே நாளில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதை அனுமதிக்கலாம். ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை நாளிதழ்களில் விளம்பரம் செய்யலாம். அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியளிக்கலாம்.

ஆ) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு **16.4.2020** தேதி நிர்ணயம் செய்ததை அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட இரு வணிக வளாகங்களுக்கும் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதற்கும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண் : அ1/17371/2019 (கோ.அபி)**

**தீர்மானம் எண்.123 (பொருள்–3): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ–அபிசேகபுரம் கோட்டம் வார்டு எண்.52ல் இயங்கிவரும் புத்தூர் மீன் மார்க்கெட்டினை குழுமணி சாலை காசிவிளங்கி பகுதி நவீன மீன்மார்கெட்டுக்கு மாற்றம் செய்யும் பணிகள் நடந்துவருகிறது. மேற்படி புத்தூர் மார்க்கெட்டினை ஏற்கனவே **2019-2020** ஆம் ஆண்டிற்கு ரூ.4001666/- என்ற குத்தகைத் தொகைக்கு திரு.முகமது பிலால் என்பவருக்கு விடப்பட்டதில் **31.03.2020** வரை புத்தூர் சந்தை குத்தகை உரிமத்தினை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டு **31.3.2020** அன்று அன்னாரது குத்தகைக் காலம் முடிவடைகிறது. இந்நிலையில் **2020-2021**ம் ஆண்டிற்கு **5%** உயர்வு செய்து ரூ.4201749/- ஆண்டு குத்தகை தொகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும் **1.04.2020** முதல் மாற்றம் செய்யப்படவுள்ள சூழ்நிலையில் **23.03.2020** முதல் கொரோனா வைரஸ் தொற்று நோய் பாதிப்பு காரணமாக தமிழக அரசு **144** தடையுத்திரவு **21** நாட்களுக்கு விதித்துள்ளதால் காசிவிளங்கி நவீன மீன் சந்தை கட்டிடப் பணிகள்

முடிவடையாமல், நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே புத்தூர் மீன் மார்க்கெட்டை இவ்வருடத்திற்கு குத்தகைக்கு விட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தடுக்கும் பொருட்டு தற்போதைய குத்தகைதாரருக்கே, சென்ற முறை உரிமம் வழங்கியது போன்று **01.04.2020** முதல் **30.04.2020** வரை உள்ள ஒரு மாத காலத்திற்கு புத்தூர் தினசரி சந்தை கட்டண வசூல் உரிமத்தினை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிடவும் **2020-2021**ம் ஆண்டிற்கு உயர்வு செய்யப்பட்ட உரிமத்தொகை **ரூ.4201740/-**ல் ஒரு மாத குத்தகை உரிம தொகையாக **ரூ.350146/–**ஐ மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ளதையும், (நாளொன்றுக்கு சராசரியாக **ரூ.11671/-** வீதம்) திரு.ஏ.முகமது பிலால் குத்தகைதாரர் ஒருமாத காலத்திற்கு சந்தையை நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்து உரிமத் தொகையை **31.03.2020** அன்று மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளதை அனுமதித்து அன்னாருக்கு 2020-2021ம் ஆண்டிற்கு **01.04.2020** முதல் **30.04.2020** வரை ஒரு மாதத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்வதை அனுமதிக்க வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

கொரோனா தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை காரணமாகவும், காசிவிளங்கி மீன் சந்தை பணிகள் நடைபெறாததால் இடமாற்றம் செய்ய இயலாததாலும், மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாமை காரணமாகவும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாமல் தடுக்கும்பொருட்டு திரு.முகமது பிலால் குத்தகைதாரருக்கு 01.04.2020 முதல் 30.04.2020 வரை உள்ள ஒரு மாத காலத்திற்கு புத்தூர் தினசரி சந்தை கட்டண வசூல் உரிமத்தினை நீட்டிப்பு செய்து வழங்கியதை அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் : அ1/2055/2019 கோ.அபி**

**தீர்மானம் எண்.124 (பொருள்–4): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ–அபிஷேகபுரம் கோட்டம், நுண் உயிர் உரக்கூடம் மற்றும் திடக்கழிவு சேகரிக்கும் இலகுரக வாகனங்களில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தினக்கூலி அடிப்படையில் **209** சுய உதவி குழு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் **209** குழு பணியாளர்களில் **10** சதவீதம் ஆட்குறைப்பு நடவடிக்கையின் மேற்கொண்டதில் **188** சுயஉதவிக்குழு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே கீழ்கண்ட **7** நுண்உர செயலாக்க மையத்தில் குழுக்களில் உள்ள **188** சுயஉதவிக்குழு பணியாளர்களை **2020–2021** ம் நிதியாண்டில் **(01.04.2020** முதல் **31.03.2021** வரை) தொடர்ந்து பணியமர்த்தவும், அதற்குண்டான உத்தேச செலவினம் **188** X 500 X **94000** X366 நாட்கள்= **ரூ.3,44,04,000/–** (தொழிலாளர் நல நிதி உள்பட) கணக்கீடப்படுகிறது. எனவே கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுயஉதவிக் குழுப்பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கு அனுமதி வேண்டி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | நுண் உர செயலாக்க மையத்தின் பெயர் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | ஊதியம் வழங்க வேண்டிய காலம் | உத்தேச செலவினத் தொகை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 40,41,45 | கருமண்டபம் | 41 | 01.04.2020<br>31.03.2021 | 41 | x | 500 | x | 20500 | x | 366 | 7503000 |
| 2 | 49,50 | குழுமிக்கரை | 23 | 01.04.2020<br>31.03.2021 | 23 | x | 500 | x | 11500 | x | 366 | 4209000 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 51,54 | கல்லாங்காடு | 21 | 01.04.2020<br>31.03.2021 | 21 | x | 500 | x | 10500 | x | 366 | 3843000 |
| 4 | 52,53 | வயலூர் ரோடு | 30 | 01.04.2020<br>31.03.2021 | 30 | x | 500 | x | 15000 | x | 366 | 5490000 |
| 5 | 55,56 | வாமடம் | 26 | 01.04.2020<br>31.03.2021 | 26 | x | 500 | x | 13000 | x | 366 | 4758000 |
| 6 | 57,58 | கோணக்கரை | 24 | 01.04.2020<br>31.03.2021 | 24 | x | 500 | x | 12000 | x | 366 | 4392000 |
| 7 | 59,60 | பனிக்கன் தெரு | 23 | 01.04.2020<br>31.03.2021 | 23 | x | 500 | x | 11500 | x | 366 | 4209000 |
| **மொத்தம்** | | | **188** | | **188** | **X** | **500** | **X** | **94000** | **X** | **366** | **34404000** |

**அலுவலகக்குறிப்பு :**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் நுண் உர செயலாக்க மையத்தில் பணிபுரியும் சுயஉதவிக் குழு பணியாளர்கள் 188 நபர்களை தொடர்ந்து பணிக்கு பயன்படுத்தி கொள்ளவும், 01.04.2020 முதல் 31.03.2021 வரை இச்சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய தினக்கூலி உத்தேச செலவினம் ரூ.3,44,04,000/–க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.சி4/5243/2020(கோ.அபி)**

**தீர்மானம் எண்.125 (பொருள்–5): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – சு. சிவசுப்பிரமணியன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**